இந்து தமிழ் 26 JAN 2025



**விழிப்புணர்வு பேரணி**

ஈரோட்டில், 'வாக்களிப்பதே சிறந்தது, நிச்சயம் வாக்களிப்பேன்' என்ற தலைப்பில் வாக்காளர் தின நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான ராஜகோபால் சுன்கரா தலைமை வகித்துப் பேசினார். தொடர்ந்து தேசிய வாக்காளர் தின உறுதிமொழி ஏற்கப்பட்டது. முன்னதாக, வாக்களிப்பதன் அவசியம் குறித்து கல்லூரி மாணவியரின் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மேலும், வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. வாக்காளர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

National Voters' Day.

Awareness Marathon to emphasis 100% polling turnout in Erode.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 26 JAN 2025




ஈரோட்டில்


## தேசிய வாக்காளர் தினத்தையொட்டி விழிப்புணர்வு மாரத்தான்

ஈரோடு, ஜன.26-
ஈரோட்டில் தேசிய வாக்காளர் தினத்தையொட்டி விழிப்புணர்வு மாரத்தான் நேற்று நடந்தது. இந்த மாரத்தானை மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா கொடி அசைத்து தொடங்கி வைத்தார். ஈரோடு கலெக்டர் அலுவலக வளாகத்தில் தொடங்கிய மாரத்தான், சம்பத் நகர் வரை சென்று மீண்டும் கலெக்டர் அலுவலக வளாகத்தில் நிறைவுபெற்றது. இதில் கலந்து கொண்ட கல்லூரி மாணவ- மாணவிகள், வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதைத்தொடர்ந்து ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், 'வாக்களிப்பதே சிறந்தது, நிச்சயம் வாக்களிப்பேன்' என்ற தலைப்பில் வாக்காளர் தின நிகழ்ச்சி நடந்தது. இதையொட்டி அனைத்து துறை அலுவலர்கள், தேசிய வாக்காளர் தின உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். பின்னர் தேசிய வாக்காளர் தினத்தையொட்டி பள்ளி, கல்லூரி மாணவ- மாணவிகளுக்கு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, பாட்டு போட்டி, கடித வரைவு போட்டி, கோலப்போட்டி, வினாடி- வினா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதில் மாநகராட்சி ஆணையாளர் ஸ்ரீகாந்த், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், கலெக்டரின் நேர்முக உதவியாளர்கள் முகமது குதுரத்துல்லா, பிரேமலதா, மாவட்ட சமூக நல அலுவலர் சண்முகவடிவு, தேர்தல் தாசில்தார் சிவசங்கர், ஈரோடு தாசில்தார் முத்துகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

National Voters' Day.
Awareness Marathon to emphasis 100% polling turnout in Erode.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 26 JAN 2025



ஈரோடு காளைமாட்டு சிலை அருகே உள்ள மாநகராட்சி தொடக்க பள்ளிக்கூடத்தில் மாதிரி வாக்குச்சாவடி மையம் அமைக்கப்பட்டு இருந்ததை படத்தில் காணலாம்.

### ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு

# மாதிரி வாக்குச்சாவடி மையம் அமைப்பு

ஈரோடு, ஜன.26-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு ஈரோட்டில் மாதிரி வாக்குச்சாவடி மையம் அமைக்கப்பட்டது.

## மாதிரி வாக்குச்சாவடி மையம்

ஈரோடு காளை மாட்டு சிலை அருகே உள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளிக்கூட வாக்குச்சாவடியில், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலைமுன்னிட்டும், தேசிய வாக்காளர் தினத்தையொட்டியும், 'மாதிரி வாக்குச்சாவடி மையம்' நேற்று அமைக்கப்பட்டது.

இந்த மையத்தில், ஒரு வாக்குப்பதிவு தலைமை அலுவலர், 3 நிலை அலுவலர்கள் என 4 பேர் அமர்ந்திருந்தனர். அங்கு மின்னணு வாக்குப்பதிவு எந்திரம், கட்டுப்பாட்டு கருவி, வி.வி.பேட் ஆகியவை வைக்கப்பட்டு, தேர்தல் நாளில் வாக்குப்பதிவு நடப்பது போன்று ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

## கருப்பு மை

வாக்காளரை வரவழைத்து, முதல் மேஜையில் அவரது வாக்காளர் அடையாள அட்டை மற்றும் வாக்காளர் பெயர் விவரத்தை வைத்து, வாக்காளர் பட்டியலில் அவரது பாகம், பக்கம் எண் போன்றவற்றை குறித்து, அவர் கொண்டு வந்துள்ள ஆவணத்தை பதிவு செய்தனர். அடுத்த அலுவலர் அவரது கையில் கருப்பு மை வைத்து, வாக்குப்பதிவுக்கான துண்டு சீட்டை வழங்கினார்.

வாக்குப்பதிவுக்கான பொத்தானை மறு அலுவலர் அழுத்தியதும், வாக்காளராக வந்த நபர், தனது வாக்கை பதிவு செய்து, 'பீப்' சத்தத்துக்கு பின்னர் வெளியே வந்தார். அவரது பதிவுகள், வி.வி.பேடில் பதிவானது. அதேபோன்று ஒவ்வொரு வாக்காளர்களையும் வரவழைத்து, மாதிரி வாக்குப்பதிவு நடத்தினர்.

Erode East Assembly Constituency By-election.
Mock Polling Centre set up.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 26 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கு

# கூடுதலாக 568 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் ஒதுக்கீடு

ஈரோடு, ஜன.26-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடைபெற உள்ளது. இந்த தொகுதியில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்திய தேர்தல் ஆணைய அறிவுரையின்படி மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களுக்கு கணினி முறையில் ஆணைய இணையதளத்தின் மூலம் கடந்த 13-ந்தேதி அன்று 20 சதவீதம் மின்னணு வாக்குப்பதிவு எந்திரம், கட்டுப்பாட்டு கருவி மற்றும் 30 சதவீதம் வி.வி.பேடு கருவி சேர்த்து தற்போது மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் 284, கட்டுப்பாட்டு கருவி 284, வி.வி. பேடு கருவி 308 கணினி சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 46 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதால், இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் கணினி துணை சுழற்சி முறையில் கூடுதலாக 568 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் ஒதுக்கீடு செய்யும் பணி, மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இதில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையாளருமான ஸ்ரீகாந்த், மாவட்ட வருவாய் அதிகாரி சாந்தகுமார், உதவி கலெக்டர் (பயிற்சி) ராமகிருஷ்ணசாமி, துணை கலெக்டர் (பயிற்சி) சிவபிரகாசம், தேர்தல் தாசில்தார் சிவசங்கர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

Erode East Assembly Constituency By-election.
568 Additional EVMs allotted.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 26 JAN 2025

## நாம் தமிழர் கட்சி வேட்பாளர் உள்பட 37 பேர் மீது வழக்கு

ஈரோடு, ஜன.26-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில், நாம் தமிழர் கட்சி சார்பில் சீதாலட்சுமி போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவு திரட்டுவதற்காக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஈரோட்டில் தங்கி தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். இந்த நிலையில் நேற்று 2-வது நாளாக அவர், ஈரோடு காளைமாடு சிலை, மரப்பாலம், மண்டபம் வீதியில் பிரசாரம் செய்தார்.

அப்போது காளைமாடு சிலை பகுதியில் உரிய அனுமதி பெறாமல் கட்சி கொடி, பேனர்கள், ஒலி பெருக்கி வைத்து பிரசாரம் செய்ததாக நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி உள்பட 37 பேர் மீது ஈரோடு சூரம்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

Cases filed on 37 people including NTK candidate.

Scanned with OKEN Scanner

தினமலர் 26 JAN 2025

## ஈரோட்டில் தேர்தல் விதிகள் மீறல்

# நாதக வேட்பாளர் உட்பட 37 பேர் மீது வழக்குப்பதிவு

ஈரோடு, ஜன.26-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இத்தேர்தலில் அதிமுக, பாஜ, தேமுதிக உள்ளிட்ட பிரதான கட்சிகள் போட்டியிடாததால் திமுக, நாம் தமிழர் கட்சி ஆகிய இரண்டு கட்சிகள் மட்டுமே நேரடி போட்டியில் இறங்கி உள்ளன.

இதில் திமுக வேட்பாளர் சந்திரகுமாரும், நாதக வேட்பாளர் சீதாலட்சுமியும் ஒவ்வொரு வார்டாக சென்று தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் பிரச்சாரத்தின் முதல் நாளே நாதக வேட்பாளர் சீதாலட்சுமி உட்பட கட்சி உறுப்பினர்கள் பலர் மீது தேர்தல் விதிமுறைகளை மீறியதாக சுமார் 8 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று காலை நாதக வேட்பாளர் சீதாலட்சுமி காளை மாடு சிலை பகுதி, கள்ளுக்கடை மேடு, மரப்பாலம் போன்ற பகுதிகளில் தனது கட்சி உறுப்பினர்களுடன் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

இதில் காளை மாட்டு சிலை பகுதியில் தேர்தல் நடத்தை விதிகளை மீறி ஒலிபெருக்கி, கட்சி கொடிகள், பேனர்கள் வைத்து பிரச்சாரம் மேற்கொண்டதாக நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி உட்பட 37 நபர்கள் மீது ஈரோடு சூரம்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

Violation of ECC.

Cases filed on 37 people including NTK candidate.

Scanned with OKEN Scanner

தினமலர் 26 JAN 2025



ஈரோடு கிழக்கு தொகுதி கச்சேரி வீதியில் சீமான் பிரச்சாரம் செய்ய வந்தபோது எதிர்ப்பு தெரிவித்த காங்கிரசார்.

## ஈரோடு கிழக்கு தொகுதியில்

# சீமான் பிரச்சாரம் செய்ய காங்கிரசார் எதிர்ப்பு

ஈரோடு, ஜன.26-

ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமிக்கு ஆதரவாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கடந்த 2 நாட்களாக ஈரோடு கிழக்குத் தொகுதியின் பல்வேறு வார்டுகளில் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

சமீபத்தில் பெரியாரைப் பற்றி அவர் கூறிய கருத்துக்கள் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதனால் பெரியார் பிறந்த மண்ணான ஈரோடு கிழக்கு தொகுதிக்கு சீமான் வருவதால் பிரச்சாரத்தின் போது பிரச்சனைகள் ஏதும் ஏற்படாமல் தடுக்கும் வகையில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று காலை சீமான் ஈரோடு காளைமாடு சிலை, கள்ளுக்கடைமேடு, மரப்பாலம் போன்ற பகுதிகளில் திறந்த வேனில் நின்றபடி வாக்கு சேகரித்தபடியே பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது சீமான் அதே பகுதியில் உள்ள கச்சேரி வீதியில் மறைந்த ஈரோடு கிழக்கு தொகுதியின் முன்னாள் எம்எல்ஏ ஈவிகேஎஸ். இளங்கோவன் வீட்டின் அருகே பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அங்கிருந்த 10க்கும் மேற்பட்ட க்காங்கிரசார், பெரியாரைப் பற்றி அவதூறாக பேசிய சீமான் இங்கு வந்து பிரச்சாரம் செய்யக்கூடாது என கூச்சலிட்டு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவர்களை கட்டுப்படுத்த முயன்றனர். ஆனால் அவர்களில் சிலர் சீமானுக்கு எதிராக கோஷமிட்டபடி சாலையில் அமர்ந்து மறியல் செய்ய முயன்றனர். இதை தொடர்ந்து போலீசார் அவர்களை அப்புறப்படுத்தினர்.

இதுபற்றி காங்கிரசார் கூறுகையில், கிழக்குத் தொகுதியில் வேறு எங்காவது சீமான் பிரச்சாரம் செய்து கொள்ளட்டும். பெரியாரைப் பற்றி அவதூறாக பேசி விட்டு அவர் வீட்டு முன்பு பிரச்சாரத்திற்கு வந்தால் பிரச்சனை ஏற்படும் என்று போலீசாருக்கு முதலிலேயே தெரிவித்து இருந்தோம்.

அவ்வாறு நடக்காது என்று கூறிய போலீசார் இப்போது அவரை இங்கே பிரச்சாரத்திற்கு அனுமதித்துள்ளனர் என்று கோபமுடன் கூறினர். இதைத்தொடர்ந்து போலீசார் அமைதிப்படுத்திய பிறகு சீமான் அதே வீதியில் நின்று திமுகவினரையும், காங்கிரஸ் கட்சியையும் பற்றி பல்வேறு கருத்துகளை கூறியபடி சுமார் 20 நிமிடம் பேசிவிட்டு அடுத்த பகுதிக்கு வாக்கு சேகரிக்க புறப்பட்டுச் சென்றார்.

இதனால் இதுவரை மந்த நிலையில் நடந்து வந்த ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் பிரச்சாரம் தற்போது சூடு பிடித்துள்ளது.

Erode East Assembly Constituency By-election.
Congress people opposes Seeman's Campaign.

Scanned with OKEN Scanner

தினகரன்    2 6 JAN 2025

# 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு



▶ ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி வீரப்பம்பாளையத்தில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

ஈரோடு, ஜன.26: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி வீரப்பம்பாளையம் மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் கோலம் போட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா அறிவுறுத்தலின் பேரில், பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, மாரத்தான் விழிப்புணர்வு போட்டி, செல்பி பாய்ண்ட், பொது மக்களிடையே துண்டு பிரசுரங்கள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக, வீரப்பம்பாளையம் மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் கோலம் போட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மாநகராட்சி நிர்வாகம் சார்பில் நடந்த இந்நிகழ்ச்சியில், ஆசிரியர்கள், ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

SVEEP ACTIVITY : Awareness programme for 100% polling turnout.

Scanned with OKEN Scanner

தினகரன்     2 6 JAN 2025

### தேசிய வாக்காளர் தினத்தையொட்டி


# மாநகராட்சி துவக்கப்பள்ளியில் மாதிரி வாக்குச்சாவடி அமைப்பு

## ஆணையாளர் துவக்கி வைத்தார்

ஈரோடு, ஜன.26: ஈரோட்டில் தேசிய வாக்காளர் தினத்தையொட்டி மாநகராட்சி துவக்கப்பள்ளியில் மாதிரி வாக்குச்சாவடி மையத்தை மாநகராட்சி ஆணையாளர் ஸ்ரீகாந்த் துவக்கி வைத்து, வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

தேசிய வாக்காளர் தினத்தையொட்டி 100 சதவீதம் அனைத்து வாக்காளர்களும் வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்திட தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியது.

இதன்பேரில், ஈரோடு கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட காளைமாட்டு சிலை அருகில் உள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளியில் மாதிரி வாக்குச்சாவடி மையம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த மாதிரி வாக்குச்சாவடி மையத்தினை ஈரோடு மாநகராட்சி ஆணையாளரும், கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரான ஸ்ரீகாந்த் துவக்கி வைத்து, வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



▶ ஈரோடு காளைமாட்டு சிலை அருகே பாலசுப்ராயலு வீதியில் அமைந்துள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளியில் தேசிய வாக்காளர் தினத்தையொட்டி அமைக்கப்பட்டுள்ள மாதிரி வாக்குச்சாவடியை மாநகராட்சி கமிஷனர் ஸ்ரீகாந்த் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த மாதிரி வாக்குச்சாவடி மையத்தில், தேர்தல் நடக்கும்போது வாக்குப்பதிவு பதிவு செய்யும் வாக்குச்சாவடி மையம் போலவே அமைக்கப்பட்டிருந்தது.

இதில், வாக்குப்பதிவு தலைமை அலுவலர், 3 நிலை அலுவலர்கள் என 4 பேர் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் (அலுவலர்கள்) ஆகியோரும் அமர்ந்திருந்தனர். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், கட்டுப்பாட்டு இயந்திரம், விவிபேட் ஆகியவை வைக்கப்பட்டிருந்தது.

இந்த மாதிரி வாக்குச்சாவடி மையத்திற்கு வந்த முதல் முறை வாக்களிக்கும் இளம் வாக்காளர்களுக்கு தேர்தல் வாக்குப்பதிவு நடைமுறை, எவ்வாறு வாக்களிக்கவேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

முன்னதாக வாக்குச்சாவடி மையம் முன், தேர்தல் நாளில் உள்ளது போலவே வாக்குச்சாவடியின் எண், வாக்களிக்க தகுதியான நபர்கள், வேட்பாளர்கள், அவர்களது சின்னங்கள் போன்றவை வரிசையாக பிளக்ஸ் பேனரில் வைக்கப்பட்டிருந்தது.

இவற்றையும் இளம் வாக்காளர்களுக்கு தேர்தல் பிரிவு அலுவலர்கள் ஒவ்வொன்றாக விளக்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

> **மா**திரி வாக்குச் சாவடி முன் துணை ராணுவ வீரர்கள் துப்பாக்கி ஏந்தியும், போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

மாதிரி வாக்குச்சாவடி முன் வாக்காளர்களை வரவேற்க பச்சை கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. மேலும், மாதிரி வாக்குச்சாவடி முன் துணை ராணுவ வீரர்கள் துப்பாக்கி ஏந்தியும், போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிகழ்ச்சியில், உதவி கலெக்டர்(பயிற்சி) ராமகிருஷ்ணசாமி, மாநகராட்சி துணை ஆணையர் லதா, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜ் மற்றும் தேர்தல் பிரிவு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Erode East Assembly Constituency By-election.
Mock Polling Centre set up.

Scanned with OKEN Scanner

தினகரன்

2 6 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# நிலை கண்காணிப்பு குழுவிடம் ரூ.6 லட்சம் சிக்கியது

## இதுவரை ரூ.31 லட்சம் பறிமுதல்

ஈரோடு, ஜன.26: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி. இதுவரை ரூ.31 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, தேர்தல்




நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது. இதனால், வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில் மூன்று பறக்கும் படை, மூன்று நிலை கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர், ஈரோடு கிழக்கு தொகுதி முழுவதும் தீவிர வாகன சோதனை மற்றும் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் உரிய ஆவணங்கள் இன்றி ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு செல்லப்படும் பணத்தை பறிமுதல் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று காலை (25ம் தேதி) சத்யா எடை நிலையம் அருகே நிலை கண்காணிப்பு குழுவினர் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அவ்வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை மேற்கொண்டனர். இதில், உரிய ஆவணங்களின்றி கொண்டு வரப்பட்ட ரூ.1 லட்சத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். பின்னர் நடத்திய விசாரணையில், கார் உரிமையாளர் மதன் என்பதும் நாமக்கல் மாவட்டம் களத்துவலவு பகுதியை சேர்ந்தவர் என்பது தெரியவந்தது.

இதேபோன்று, நிலை கண்காணிப்பு குழுவினர் பி.பெ.அக்ரஹாரத்தில் சோதனை மேற்கொண்டனர். அப்போது அவ்வழியாக வந்த காரில் சோதனை மேற்கொண்டபோது, உரிய ஆவணங்களின்றி கொண்டு வரப்பட்ட ரூ.2.50 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. காரை ஓட்டி வந்தவர் ராமன் என்பதும் அந்தியூர் அடுத்த தவுட்டுப்பாளையம் என்பதும் தெரியவந்தது.

இதேபோல, பழைய பாளையம் பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொண்ட சோதனையில், உரிய ஆவணங்களின்றி காரில் கொண்டுவரப்பட்ட ரூ.2.50 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. காரை ஓட்டி வந்தவர் கவிதா என்பதும் திருப்பூர் மாவட்டம் கணியம் பூண்டி என்பதும் தெரியவந்தது. இதுவரை, 31 லட்சத்து 95 ஆயிரத்து 60 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் உரிய ஆவணங்களை சமர்பித்தால், 12 லட்சத்து 93 ஆயிரத்து 60 ரூபாய் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளது. 13 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய் கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

Erode East Assembly Constituency By-election.
Static Surveillance Team seized Rs.6 Lakhs.
Rs.31 Lakhs seized so far.

Scanned with OKEN Scanner

தினகரன் 26 JAN 2025

## ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில்


# முதியோர், மாற்றுத்திறனாளிகள் இதுவரை 228 பேர் தபால் வாக்களித்துள்ளனர்

ஈரோடு, ஜன.26: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் தபால் வாக்களிக்க விருப்பம் தெரிவித்த 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளில் இதுவரை 228 பேர் தங்களது தபால் வாக்கினை பதிவு செய்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் வாக்குச்சாவடிகளுக்கு நேரடியாக வந்து வாக்களிக்க முடியாத 85 வயதுக்கு மேற்பட்ட 2,529 வாக்காளர்கள், மாற்றுத்திறனாளிகள் 1,570 என மொத்தம் 4,099 பேருக்கு தபால் வாக்குப்பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டு அவர்களுக்கு 12டி படிவம் விநியோகம் செய்யப்பட்டது.

இதில் ஈரோடு கிழக்கு தொகுக்கு உட்பட்ட 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் 209 பேரும், மாற்றுத் திறனாளிகள் 47பேரும் என மொத்தம் 256 பேர் தபால் வாக்களிக்க விருப்பம் தெரிவித்திருந்தனர்.

இவர்களுக்கான தபால் வாக்குப்பதிவு கடந்த 23ம் தொடங்கியது. தபால் வாக்கு சேகரிப்பதற்காக அமைக்கப்பட்ட 4 வாக்குச்சாவடி அலுவலர் குழுவினர் தபால் வாக்களிக்க விருப்பம் தெரிவித்த முதியோர், மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக சென்று தேர்தல் விதிமுறைகளை பின்பற்றி தபால் வாக்குகளை சேகரித்தனர். இதில், தற்போது வரை 228பேர் தபால் வாக்களித்து தங்களது ஜனநாயக கட்மையை நிறைவேற்றி உள்ளதாக தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.



▶ ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலையொட்டி நாராயண வலசு பகுதி 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர் தபால் வாக்கு செலுத்தியதை தேர்தல் பொது பார்வையாளர் அஜய் குமார் குப்தா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, நேற்றும் (25ம் தேதி) தபால் வாக்கு சேகரிக்கும் பணி நடந்தது. இப்பணிகள் வருகிற நாளைய மறுதினம் (27ம் தேதி) நிறைவு பெற உள்ளது. தபால் வாக்கு சேகரிக்கப்பட்ட சீலிடப்பட்ட வாக்குபெட்டிகள் ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தின் முதல் தளத்தில் உள்ள அறையில் வைக்கப்பட்டு, துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் காண்காணிக்கப்பட்டு வருகிறது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் தபால் வாக்கு சேகரிக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இதில், 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், மாற்றுத் திறனாளிகளிடம் வாக்குச்சாவடி அலுவலர்கள் முறையாக தேர்தல் விதிமுறைகளை பின்பற்றி வாக்கு சேகரிக்கின்றனா? என நேற்று முன்தினம் ஈரோடு நாராயணவலசு பகுதியில் தபால் வாக்கு சேகரிக்கும் பணியை தேர்தல்பொது பார்வையாளர் அஜய்குமார் குப்தா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

Erode East Assembly Constituency By-election.
228 Aged and Physically Challenged people cast their votes so far.

Scanned with OKEN Scanner


தினகரன் 26 JAN 2025

இடைத்தேர்தலையொட்டி

# கூடுதல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கணிணி சுழற்சி முறையில் ஒதுக்கீடு

ஈரோடு, ஜன.26: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு பிப்ரவரி 5ம் தேதி நடக்கிறது. இதற்காக, 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில் பயன்படுத்தப்படவுள்ள 480 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், அதே அளவிலான கண்ட்ரோல் யூனிட்டுகள் மற்றும் விவிபேட் ஆகியவற்றை சரி பார்க்கும் பணி கடந்த 11ம் தேதி நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து, வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் அதன் கிடங்கில் தயார் நிலையில் வைக்கப்பட்டன.

அவற்றை கணினி சுழற்சி முறையில் வாக்குச்சாவடி மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பணி முதற்கட்டமாக கடந்த 13ம் தேதி நடைபெற்றது. இதில் 20 சதவீத வாக்குப்பதிவு இயந்திரங்கள், 20 சதவீத கண்ட்ரோல் யூனிட்டுகள் மற்றும் 30 சதவீதம் விவிபேட் யூனிட்கள் என மொத்தம் 284 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 284 கண்ட்ரோல் யூனிட்டுகள் மற்றும் 38 விவிபேட் யூனிட்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



▶ ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் கிழக்கு தொகுதி வாக்குப்பதிவுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கணினி சுழற்சி முறையில் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா தலைமையில் சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 46 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதால், இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் கணினி துணை சுழற்சி முறையில் கூடுதலாக, 568 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யும் பணி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்கள் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால்சுன்கரா தலைமை வகித்தார். இந்நிகழ்வில், தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான ஸ்ரீகாந்த், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) ராமகிருஷ்ணசாமி, துணை ஆட்சியர் (பயிற்சி) சிவபிரகாசம், வட்டாட்சியர் (தேர்தல்) சிவசங்கர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜ் உட்பட தொடர்புடைய தேர்தல் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Erode East Assembly Constituency By-election.
Additional EVMs allotted by randomisation.

Scanned with OKEN Scanner

தினகரன்        26 JAN 2025

### தேசிய வாக்காளர் தினத்தையொட்டி

# ஈரோட்டில் விழிப்புணர்வு மாரத்தான்




▶ தேசிய வாக்காளர் தினத்தையொட்டி ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் இருந்து விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நடந்தது. இதனை கலெக்டர் ராஜகோபால் சுன்கரா கொடியைத்து துவக்கி வைத்தார். இதில் ஏராளமானோர் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

ஈரோடு, ஜன.26: தேசிய வாக்காளர் தினம் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 25ம் தேதி கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி, இன்று நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இதில், ஈரோட்டில் பொதுமக்கள் வாக்களிப்பதன் அவசியத்தை எடுத்துரைக்கும் வகையில் வாக்காளர் தின விழிப்புணர்வு மாரத்தான் இன்று நடந்தது. இந்த மாரத்தானை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுலவரும், மாநகராட்சி ஆணையருமான ஸ்ரீகாந்த் முன்னிலை வகித்தார். இந்த மாரத்தானானது ஈரோடு கலெக்டர் அலுவலக வளாகத்தில் தொடங்கி, சம்பத் நகர் வரை சென்று மீண்டும் கலெக்டர் அலுவலக வளாகத்தில் நிறைவடைந்தது. இதில், கல்லூரி மாணவ-மாணவிகள் 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்று வாக்களிப்பதன் அவசியத்தை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் தேசிய வாக்காளர் தினத்தையொட்டி நேற்று 'வாக்களிப்பதே சிறந்தது, நிச்சயம் வாக்களிப்பேன்' என்ற தலைப்பில் வாக்காளர் தின நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சி கலெக்டர் ராஜகோபால் சுன்கரா தலைமையில் நடந்தது. தொடர்ந்து தேசிய வாக்காளர் தின உறுதிமொழியை அனைத்து துறை அலுவலர்கள், பணியாளர்கள், மாணவ-மாணவிகள் ஏற்றுக்கொண்டனர்.

தேர்தல் ஆணையமானது 75 ஆண்டுகள் நிறைவு செய்துள்ளது. இந்த ஆண்டு வருகிற பிப்ரவரி 5ம் தேதி ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. வாக்காளர் தினமானது அதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. கடந்த 2023ம் ஆண்டு நடந்த ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 74.69 சதவீதம் வாக்குப்பதிவும், அதையடுத்து நடந்த நாடாளுமன்ற தேர்தலில் 66.05 சதவீதம் வாக்குகளும் பதிவாகியுள்ளது. வருகிற இடைத்தேர்தலில் வாக்களிக்க வசதியாக பிப்ரவரி 5ம் தேதி கிழக்கு தொகுதி பகுதிகளில் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இதனை விடுமுறையாக பயன்படுத்தாமல் அனைவரும் வாக்களிப்பதற்கு ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி வாக்களித்து, ஈரோடு மாவட்டத்தில் இதுவரை இல்லாத வகையில் அதிகப்படியான வாக்கு சதவீதத்தை அடையவேண்டும்.

இவ்வாறு கலெக்டர் பேசினார்.

தேசிய வாக்காளர் தினத்தையொட்டி பள்ளி, கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, சுவரொட்டி வடிவில் சுவர் இதழ் போட்டி, பாட்டு போட்டி, கடித வரைவு போட்டி, கோலப்போட்டி (மகளிர் சுய உதவிக்குழு), வினாடி-வினா போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ-மாணவிகளுக்கு பரிசும், சான்றிதழ்களும் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா வழங்கினார். மேலும், தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் சிறப்பாக பணியாற்றிய கல்லூரி மாணவ-மாணவிகள், பொறுப்பு அலுவலர்கள், வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள், தேர்தல் கல்விக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், மாணவ தூதுவர் ஆகியோர்களுக்கு பாராட்டி சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

வாக்காளர்களை கவுரவிக்கும் வகையில் மாற்றுத்திறனாளிகள், பெண் வாக்காளர்கள், இளம் வாக்காளர்கள், மூத்த வாக்காளர்கள், மூன்றாம் பாலினத்தவர் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி கவுரவிக்கப்பட்டனர். 3 இளம் வாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டையினையும் நிகழ்ச்சியில் கலெக்டர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், கலெக்டரின் நேர்முக உதவியாளர்கள் முகமது குதுரத்துல்லா, பிரேமலதா, மாவட்ட சமூக நல அலுவலர் சண்முகவடிவு, தேர்தல் தாசில்தார் சிவசங்கர், ஈரோடு தாசில்தார் முத்துகிருஷ்ணன், மாவட்ட விளையாட்டு அலுவலர் சதீஷ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

National Voters' Day.
Awareness Marathon to emphasis 100% polling turnout in Erode.

Scanned with OKEN Scanner

தினகரன் 26 JAN 2025

## பெரியார் குறித்து விமர்சன பேச்சு

# சீமான் பிரசாரத்திற்கு காங். கட்சியினர் எதிர்ப்பு

### நாதகவினரும் கோஷமிட்டதால் பரபரப்பு

ஈரோடு, ஜன.26: ஈரோட்டில் காங்கிரஸ் கட்சியினர் சீமான் பிரசாரத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷங்கள் எழுப்பினர். அப்போது, நாதகவினரும் கோஷமிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.


ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளரை ஆதரித்து அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் 2வது நாளாக நேற்று காலை காளைமாட்டு சிலை சந்திப்பில் தனது பிரசாரத்தை தொடங்கினார். மரப்பாலம் பகுதியில் பிரசாரம் செய்துவிட்டு, திறந்த வேனில் மரப்பாலத்தில் இருந்து கச்சேரி வீதி, வளையக்கார் வீதி வழியாக வந்து, மறைந்த ஈரோடு கிழக்கு தொகுதி எம்எல்ஏவாக இருந்த ஈவிகேஎஸ் இளங்கோவன் வீட்டின் அருகே வேன் நின்றது.

அங்கு, பிரசார வாகனத்தில் சீமான் பேசுவதற்கு முன்னதாக நாதகவை சேர்ந்த இடும்பாவன் கார்த்தி பெரியார் பற்றி விமர்சித்து பேசினார். அப்போது ஈவிகேஎஸ் இளங்கோவன் வீட்டின் முன் நின்றிருந்த காங்கிரஸ் கட்சியின் சிறுபான்மை பிரிவை சேர்ந்த ஜூபைர் அகமது தலைமையிலான காங்கிரஸ் கட்சியினர் திடீரென நாதகவினர் பிரசாரத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, 'பெரியார் வாழ்க' என கோஷமிட்டனர். "சீமான் இந்த இடத்தில் பிரசாரம் செய்யக்கூடாது" எனவும், பெரியார் பற்றி தவறாக பேசிய சீமானை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பினர்.

நாதகவை சேர்ந்தவர்களும், எதிர்ப்பு தெரிவித்து கோஷங்கள் எழுப்பினர். இதையடுத்து, அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த ஈரோடு டவுன் டிஎஸ்பி முத்துகுமரன் தலைமையிலான போலீசார் காங்கிரஸ் கட்சியினரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஜூபைர் அகமது சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டார். அவரை போலீசார் சமாதனம் செய்து அனுப்பிவைத்தனர். இதே போல் நாதகவினரிடமும் போலீசார் சமரசம் பேசினர். இந்த சம்பவத்தை தொடர்ந்து, சீமான் ஒரு சில நிமிடங்கள் வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் செய்துவிட்டு, அந்த இடத்தில் இருந்து புறப்பட்டார். இச்சம்பவத்தால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



▶ போலீஸ் பாதுகாப்புடன் பிரசாரம் செய்த சீமான்.





▶ எதிர்ப்பு தெரிவித்தும், ரோட்டில் அமர்ந்தும் போராட்டம் நடத்திய காங்கிரசார்.

### சீமான் பிரசாரத்திற்கு ஜிம் பாய்ஸ் பாதுகாப்பு

சீமான் பெரியார் குறித்து இழிவாக பேசிய விவகாரத்தினால், அவருக்கு ஈரோட்டில் கடும் எதிர்ப்பு இருந்து வருகிறது. இதனால், ஈரோடு இடைத்தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள வந்துள்ள சீமானுக்கு, போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பிரசாரம் மேற்கொள்ளும் இடங்களிலும் சீமான் பலத்த போலீஸ் பாதுகாப்புடனே தேர்தல் பிரசாரம் செய்து வருகிறார். சீமான் பிரசாரத்திற்கு போலீஸ் பாதுகாப்பு மட்டும் அல்லாமல், அக்கட்சியின் சார்பில் ஜிம் பாய்ஸ் கருப்பு உடை அணிந்து சீமானுக்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

Slander Speech on Periyar.
Congress people opposes Seeman's Campaign.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 26 JAN 2025

## தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு மராத்தான்

**ஈரோடு, ஜன. 26–**

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, விழிப் புணர்வு மராத்தான் ஈரோட்டில் நேற்று நடந்தது. கலெக்டர் அலுவலகத்தில் தொடங்கிய மராத்தானை, கலெக்டர் ராஜகோபால் சுன்கரா துவக்கி வைத்தார். கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் முன்னிலை வகித்தார். சம்பத் நகர் வழியாக சென்று மீண்டும் கலெக்டர் அலுவலகத்தை ஊர்வலம் அடைந்தது. இதில் கல்லூரி மாணவ, மாணவியர், பொதுமக்கள், தேர்தல் பிரிவினர் பங்கேற்றனர்.

National Voters' Day.
Awareness Marathon to emphasis 100% polling turnout in Erode.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 26 JAN 2025

## விழிப்புணர்வு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு

**ஈரோடு, ஜன. 28-**

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியரிடையே பேச்சு, சுவரொட்டி வடிவில் சுவர் இதழ் போட்டி, பாட்டு போட்டி, கடிதம் எழுதும் போட்டி, மகளிர் குழுவினருக்கு கோலப்போட்டி; வினாடி – வினா போட்டி ஈரோட்டில் நடந்தது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு, கலெக்டர் ராஜகோபால் சுன்கரா பரிசு, சான்றிதழ் வழங்கினார்.

National Voters' Day.
Awareness Competitions held. Winners are awarded with prizes.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 2 6 JAN 2025

## மாதிரி ஓட்டுச்சாவடி அமைப்பு

ஈரோடு, காளை மாட்டு சிலை அருகே
யுள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளியில்,
மாதிரி ஓட்டுச்சாவடி மையத்தை, தொகுதி
தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி
ஆணையருமான ஸ்ரீகாந்த் துவக்கி வைத்து,
வாக்காளிப்பதன் முக்கியத்துவம்
பற்றி பேசினார். தேசிய வாக்
காளர் தினத்தை முன்
னிட்டும், இடைத்தேர்தலில்,
100 சதவித ஓட்டுப்பதிவை
வலியுறுத்தியும் மாதிரி ஓட்
டுச்சாவடி மையம் அமைக்
கப்பட்டது. ஓட்டுப்பதிவு
இயந்திரம், கட்டுப்பாட்டு
இயந்திரம், விவிபேட் வைக
கப்பட்டு, முதன்முறை வாக்க
ளிக்கும் வாக்காளர்களுக்கு விளக்கம் தரப்
பட்டது. ஓட்டுச்சாவடி முன் துணை ராணுவ
வீரர்கள் துப்பாக்கி ஏந்தியும், போலீசார்
பாதுகாப்பு பணியிலும் ஈடுபட்டிருந்தனர்.

Erode East Assembly Constituency By-election.
Mock Polling Centre set up.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 26 JAN 2025

## 228 பேர் தபால் ஓட்டுப்பதிவு

இடைத்தேர்தலில் ஓட்டுச்சாவடிக்கு சென்று ஓட்டுப்பதிவு செய்ய இயலாத, 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர், 2,529 பேர், மாற்றுத்திறனாளிகள், 1,570 பேர் என, 4,099 பேருக்கு தபால் ஓட்டுப்பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டது. இதன்படி அவர்களிடம் ஓட்டு சேகரிக்கும் பணி நடந்து வருகிறது. கடந்த, 23ல், 116 பேரிடம், 24ல், 112 பேரிடம் என, 228 பேரிடம் தபால் ஓட்டை சேகரித்தனர். இந்நாட்களில் பல்வேறு காரணத்தால், 28 பேர் ஓட்டுப்பதிவு செய்யவில்லை. அவர்களுக்கு வரும், 27ல் மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

228 Aged and Physically Challenged people cast their votes so far.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 26 JAN 2025

## ரூ.6 லட்சம் ரொக்கம் பறிமுதல்

★ ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் நிலை கண்காணிப்பு குழு அதிகாரி மதன் தலைமையிலானவர்கள், கருங்கல்பாளையம் அருகே வாகன தணிக்கை செய்தனர். அவ்வழியாக வந்த 'இக்கோ' காரில், ஆவணம் இன்றி எடுத்து வரப்பட்ட ஒரு லட்சம் ரூபாயை பறிமுதல் செய்தனர். நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை, களத்துவளவை சேர்ந்த அண்ணாதுரை பணத்தை எடுத்து வந்திருந்தார்.

★ ஈரோடு, பளையபாளையம் அருகே பறக்கும் படை அதிகாரி கேசவன் தலைமையில், இன்னோவா கிரிஸ்டா காரை சோதனையிட்டனர். காரில் வந்த திருப்பூர், கனியம் பூண்டியை சேர்ந்த ரங்கசாமி மனைவி கவிதா கொண்டு வந்த, 2.50 லட்சம் ரூபாயை, உரிய ஆவணம் இல்லாததால் பறிமுதல் செய்தனர்.

★ ஈரோடு, பி.பி.அக்ரஹாரம் அருகே பறக்கும் படை அதிகாரி கார்த்திகேயன் தலைமையில் நடந்த சோதனையில், காரில் வந்த அந்தியூர் அருகே தவிட்டுபாளையத்தை சேர்ந்த ராமன் எடுத்து வந்த, 2.50 லட்சம் ரூபாய் உரிய ஆவணங்கள் இல்லாததால் பறிமுதல் செய்தனர்.

Rs.6 Lakhs seized.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 26 JAN 2025

## சீமான் மீது 2 வழக்கு பதிவு

ஈரோட்டில் நேற்று நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். மரப்பாலம் நால்ரோடு பகுதியில் உரிய அனுமதி பெறாமல், நடத்தை விதி மீறியதாக சீமான் உள்ளிட்ட ஏழு பேர் மீதும், மண்டபம் வீதி ஜங்ஷன் பகுதியில் விதி மீறியதாக சீமான் உள்ளிட்ட ஐந்து பேர் மீதும் ஈரோடு டவுன் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இதேபோல் உரிய அனுமதி பெறாமல், காளை மாட்டு சிலையில் கட்சி கொடி, பேனர்கள், ஒலிபெருக்கி வைத்து பிரசாரம் செய்ததாக, நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி உள்ளிட்ட, 37 பேர் மீது சூரம்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

2 Cases filed on Seeman.

Scanned with OKEN Scanner

காலச்சக்கரம்
(நாளிதழ்)

26 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்குப் பதிவுக்கு பிந்தைய கருத்து கணிப்பு நடத்த தடை!

**சென்னை, ஜன.26-**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்து கணிப்பு நடத்துவதற்கும் அதை வெளியிடுவதற்கும் தடை விதித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, ஈரோடு (கிழக்கு) சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு பிப்ரவரி 5-ம் தேதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும்.

இந்த இடைத்தேர்தலின் போது, வாக்குப்பதிவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய கருத்துக் கணிப்புகளின் முடிவுகளை வெளியிடுதலுக்கும் பரப்புதலுக்கும் பின்வரும் வரையறைகள் பொருந்தும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. 1951-ம் ஆண்டு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி, எந்த நபரும் வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை நடத்துவதோ மற்றும் அதை அச்சு ஊடகம் அல்லது மின்னணு ஊடகம் வாயிலாக வெளியிடுவதோ அல்லது வேறு ஏதேனும் முறையிலோ பரப்பக் கூடாது.

தேர்தல் ஆணையம், ஒரு பொது ஆணைப்படி, பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு தேதி மற்றும் நேரத்தை அறிவிக்கும். அதாவது, ஒரு பொதுத் தேர்தலின்போது, வாக்குப்பதிவு முதல் நாளில் வாக்குப்பதிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் தொடக்கம் முதல் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வாக்குப்பதிவு முடிந்தபின் அரை மணிநேரம் வரை தொடரலாம்.

ஓர் இடைத்தேர்தல் அல்லது பல இடைத்தேர்தல்கள் ஒன்றாக நடைபெற்றால், வாக்குப்பதிவு முதல் நாளில் வாக்குப்பதிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் தொடக்கம் முதல் மற்றும் வாக்குப்பதிவின் முதல் நாளிலிருந்து வாக்குப்பதிவு முடிந்தபின் அரை மணிநேரம் வரை தொடரலாம். பல இடைத்தேர்தல்கள் வெவ்வேறு நாட்களில் ஒன்றாக நடைபெற்றால், வாக்குப்பதிவு முதல் நாளில் வாக்குப்பதிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் தொடக்கம் முதல், கடைசி வாக்குப்பதிவு முடிந்த அரைமணி நேரம் வரை தொடரலாம்.

தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளை மீறுவோருக்கு இரண்டு ஆண்டு சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து விதிக்கப்படும் என தேர்தல் ஆணையத்தால் கூறப்பட்டுள்ளது. எனவே, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறும் பிப்ரவரி 5-ம் தேதி (புதன்கிழமை) காலை 7 மணி முதல் மாலை 6.30 மணி வரை, வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை நடத்துவது மற்றும் அதை அச்சு ஊடகம் அல்லது மின்னணு ஊடகம் வாயிலாக வெளியிடுவது அல்லது வேறு ஏதேனும் முறையில் பரப்புவது தடை செய்யப்பட வேண்டிய கால அளவாக இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இடைத்தேர்தல் வாக்குப்பதிவு முடிவடைவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்துடன் முடிவடைகின்ற 48 மணி நேர கால அளவில் ஏதேனும் கருத்துக் கணிப்பு அல்லது பிற வாக்குப்பதிவு ஆய்வு முடிவுகள் உட்பட, எந்தவொரு தேர்தல் விவகாரங்களையும், எந்தவித மின்னணு ஊடகத்தில் காட்சிப்படுத்துவது தடை செய்யப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

Erode East Assembly Constituency By-election.
Ban for post-poll opinion.

Scanned with OKEN Scanner

தமிழ் முரசு 25 JAN 2025




தேசிய வாக்காளர் தினத்தையொட்டி, ஈரோட்டில் விழிப்புணர்வு மாரத்தான் போட்டி இன்று நடந்தது. இப்போட்டியை கலெக்டர் அலுவலக வளாகத்தில் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் ஏராளமானோர் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

### தேசிய வாக்காளர் தினத்தையொட்டி

# ஈரோட்டில் விழிப்புணர்வு மாரத்தான்

ஈரோடு, ஜன. 25-

ஈரோட்டில் தேசிய வாக்காளர் தினத்தையொட்டி விழிப்புணர்வு மாரத்தான் நடைபெற்றது.

தேசிய வாக்காளர் தினம் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 25ம் தேதி கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி, இன்று நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இதில், ஈரோட்டில் பொதுமக்கள் வாக்களிப்பதன் அவசியத்தை எடுத்துரைக்கும் வகையில், வாக்காளர் தின விழிப்புணர்வு மாரத்தான் இன்று நடந்தது. இந்த மாரத்தானை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா கொடியசைத்து தொடங்கி வைத்தார். கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுலவரும், மாநகராட்சி ஆணையருமான ஸ்ரீகாந்த் முன்னிலை வகித்தார். இந்த மாரத்தானானது ஈரோடு கலெக்டர் அலுவலக வளாகத்தில் தொடங்கி, சம்பத் நகர் வரைசென்று மீண்டும் கலெக்டர் அலுவலக வளாகத்தில் நிறைவடைந்தது. இதில், கல்லூரி மாணவ-மாணவிகள் 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்று வாக்களிப்பதன் அவசியத்தை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்நிகழ்ச்சியில், அரசு துறைகளை சேர்ந்த அதிகாரிகள் மற்றும் தேர்தல் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

National Voters' Day.

Awareness Marathon to emphasis 100% polling turnout in Erode.

Scanned with OKEN Scanner

தமிழ் முரசு 25 JAN 2025

# ஈரோடு இடைத்தேர்தலில் 228 தபால் வாக்குகள் பதிவு

## தேர்தல் பொதுபார்வையாளர் நேரில் ஆய்வு

ஈரோடு, ஜன. 25-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற பிப்ரவரி 5ம் தேதி நடக்க உள்ளது. இந்த தேர்தலில் வாக்குச்சாவடிகளுக்கு நேரடியாக வந்து வாக்களிக்க முடியாத 85 வயதுக்கு மேற்பட்ட 2,529 வார்க்காளர், மாற்றுத்திறனாளிகள் 1,570 பேர் என மொத்தம் 4,099 பேருக்கு தபால் வாக்குப்பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டு, அவர்களுக்கு 12டி படிவம் வினியோகம் செய்யப்பட்டது. இதில், ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் 209 பேரும், மாற்றுத்திறனாளிகள் 47 பேரும் என மொத்தம் 256 பேர் தபால் வாக்களிக்க விருப்பம் தெரிவித்திருந்தனர். இவர்களுக்கான தபால் வாக்குப்பதிவு கடந்த 23ம் தொடங்கியது. தபால் வாக்கு சேகரிப்பதற்காக அமைக்கப்பட்ட 4 வாக்குச்சாவடி அலுவலர் குழுவினர் தபால் வாக்களிக்க விருப்பம் தெரிவித்த முதியோர், மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக சென்று தேர்தல் விதிமுறைகளை பின்பற்றி தபால் வாக்குகளை சேகரித்தனர். இதில், தற்போது வரை 228 பேர் தபால் வாக்களித்து தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றி உள்ளதாக தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து, இன்றும் (25ம் தேதி) தபால் வாக்கு சேகரிக்கும் பணி நடந்தது. தபால் வாக்கு சேகரிக்கும் பணி வருகிற 27ம் தேதி நிறைவு பெற உள்ளது. ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தின் முதல் தளத்தில் உள்ள அறையில் தபால் வாக்குகள் பெட்டியில் வைக்கப்பட்டு, துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் காண்காணிக்கப்பட்டு வருகிறது.


### தேர்தல் பொது பார்வையாளர் ஆய்வு:

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் தபால் வாக்கு சேகரிக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இதில், 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், மாற்றுத்திறனாளிகளிடம் வாக்குச்சாவடி அலுவலர்கள் முறையாக தேர்தல் விதிமுறைகளை பின்பற்றி வாக்கு சேகரிக்கின்றனா? என நேற்று ஈரோடு நாராயணவலசு பகுதியில் தபால் வாக்கு சேகரிக்கும் பணியை தேர்தல் பொதுபார்வையாளர் அஜய்குமார் குப்தா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் தேர்தல் பிரிவு அலுவலர்கள் இருந்தனர்.

Erode East Assembly Constituency By-election.
General Observer inspected.
288 Postal votes polled.

Scanned with OKEN Scanner

தமிழ் முரசு 2 5 JAN 2025




ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, நாராயண வலசு பகுதியில் 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் தபால் வாக்கு செலுத்தி வருகின்றனர். இதை தேர்தல் பொது பார்வையாளர் அஜய்குமார் குப்தா நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

Erode East Assembly Constituency By-election.
General Observer inspects the Polling of Postal votes.

Scanned with OKEN Scanner

மாலை மலர் 25 JAN 2025



பெரிய அக்ரஹாரத்தில் தற்காலிக சோதனை அமைக்கப்பட்டு துணை ராணுவப்படையினர் மற்றும் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் ஆய்வு மேற்கொண்ட போது எடுத்த படம்.

### ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி

# 12 இடங்களில் தற்காலிக சோதனை சாவடிகள் அமைத்து தீவிர கண்காணிப்பு

## பணம்-பரிசு பொருட்கள் கொண்டு செல்வதை தடுக்க நடவடிக்கை

ஈரோடு, ஜன. 25–

ஈரோடு கிழக்கு தொகுதிக்கு வரும் பிப்ரவரி 5–ந் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான அறிவிப்பு கடந்த 7–ந் தேதி வெளியான உடனே தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்தன. ஈரோடு கிழக்கு தொகுதி என்பது ஈரோடு மாநகராட்சி பகுதியை முழுவதும் உள்ளடக்கியதாகும்.

**வாகன சோதனை**

ஈரோடு மாநகராட்சிகளில் 60 வார்டுகளில் 33 வார்டுகளை ஈரோடு கிழக்கு தொகுதி உள்ளடக்கியுள்ளது. தேர்தல் அறிவிப்பு வெளியான உடனேயே வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில் மூன்று பறக்கும் படை, மூன்று நிலை கண்காணிப்பு குழுக்கள், ஒரு வீடியோ குழு அமைக்கப்பட்டு அவர்கள் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈரோடு மாநகர் பகுதிக்குள் வரும் வாகனங்கள் அனைத்தும் கடும் சோதனைக்கு பிறகு உள்ளே அனுமதிக்கப்பட்டு வருகின்றன. ஈரோடு கருங்கல்பாளையம் சோதனை சாவடி மிக முக்கிய பகுதியாக உள்ளது. இந்த வழியாக தான் சேலம், நாமக்கல், ராசிபுரம், பள்ளிபாளையம், சங்ககிரி, குமாரபாளையம், திருச்செங்கோடு, சென்னை போன்ற பகுதிகளுக்கு 24 மணி நேரமும் வாகனங்கள் சென்று வருவதால் இங்கு போலீசார், தேர்தல் பறக்கும் படையினர், நிலை கண்காணிப்பு குழுவினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது பிரசாரம் இறுதி கட்டத்தை எட்டி உள்ளதால் வாகன சோதனையை தீவிரப்படுத்தி உள்ளனர். அதன்படி தற்காலிகமாக பி.பி.அக்ரஹாரம் பகுதி, சம்பத் நகர், எல்லை மாரியம்மன் கோவில், மூலபட்டறை நால்ரோடு, கொல்லம்பாளையம், வீரப்பம்பாளையம், சூளை, கருங்கல்பாளையம் காந்தி சிலை உள்பட 12 இடங்களில் தற்காலிக சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு அங்கு துணை ராணுவ படையினர், போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்று காலை இந்த பணியை ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் ஆய்வு செய்தார்.

Erode East Assembly Constituency By-election.
Temporary 12 Check-posts set up to intensify the monitoring.
Steps taken to prevent carrying amount and gifts.

Scanned with OKEN Scanner